மு. ஸ்ரீநாகேஷ்
மக்கள் தொடர்பு மேலாளர்

க.எண்.செகுவா / பகுதி 4 /சிறப்பு/ 2009 நாள் 9.12.2009

பெறுநர்
ஆசிரியர்,
தினமலர் நாளிதழ்,
சென்னை 600 002.

அய்யா,

பொருள் : சென்னைக் குடிநீர் வாரியம் – பகுதி 4– பம.62 –சென்னை கொளத்துார், தென் பழனி நகர் காந்தி தெருவில் மழை நீரும் சாக்கடை நீரும் கலந்து தெருவில் தேங்கி சுகாதார கேடு உருவாவதாக புகைப்படத்துடன் வெளியான செய்தி – பதிலளித்தல்.

பார்வை: 25.11.2009 தேதியிட்ட தினமலர் நாளிதழ்.

/0/

பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்கள் நாளிதழில் சென்னை கொளத்துார் காந்தி தெரு, தென்பழனி நகர், ராஜன் நகர், செந்தில் நகர் மற்றும் தனராஜபுர ஆகிய தெருக்களில் சமீபத்தில் பெய்த மழை காரணமாக மழைநீர் தேக்கமும் அதன் விளைவாக மழைநீருடன் கழிவுநீர் கலந்து குடிநீர் மாசுபடும் செய்தியை எங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தமைக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், தென்பழனி நகர் காந்தி தெருவில் தேங்கியிருந்த மழைநீர் சென்னை மாநகராட்சியால் 25.11.2009 அன்று அகற்றப்பட்டது. மேலும் மற்ற தெருக்களில் மழைநீரோ அல்லது கழிவுநீரோ தேங்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தெருக்களின் குடிநீரை 25.11.2009 அன்று பரிசோதித்ததில் குடிநீரின் தரம் நன்றாக உள்ளது என்றும் அறியப்பட்டது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களுடைய மக்கள் பணியில் தங்களின் ஆதரவை தொடர்ந்து வழங்கக் கோரும்,

மக்கள் தொடர்பு மேலாளர்

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!